

# இஸ்லாம் மித்திரன்.

# Islam Mittiran.

“லா இலாஹ இல்லல்லாஃ
முஹம்மதுற் றஸூலுல்லாஃ”

புத். 1. { அறப்௵ 1312 றபியுல்அவ்வல்மீ 15௳ ஞா.கி. / இங்கிலிஷ்௵ 1894 செப்டம்பர்மீ 16௳ ஞா. } இல. 15.

## பூகம்பம்.

பூகம்பமானது பூமியின் அதிர்ச்சி அல்லது நடுக்கம் அது மற்றக்காற்று மழை முதலியவைபோலத் தன் வருகையை முன்னதாய்த் தெரிவிப்பதல்ல. பூகம்பம் உண்டாவதற்குச் சற்றுமுன் அது உண்டாகப்போகிறதென்று ஊகித்து அறிவது அசாத்தியம். மேலும் இதற்கு ஆதி இப்படிப் பட்டதென்று இதுவரையில் யாரும் வெளியாய்க் கண்டறிந்து சொன்னவரில்லை. அதனால் உண்டாகும் தீங்குகளை நினைக்கும்போதே மனதிற்கு ஓர் அச்சமும் நடுக்கமும் உண்டாகின்றன. கடலில் அபாயங்களிருக்கின்றனவென்பது உண்மையேயாயினும், அது அபாயகரமென்பதை ஒருவன் பார்க்கும்போதே தெரிந்துகொள்ளலாம். அது எப்போதும் நிலையின்றி தளும்பி அசைந்துகொண்டிருப்பதே தன்னிடத்தில் அபாயங்களிருப்பதைக் காட்டுகிறது; தரையோ அப்படியல்ல, அது எப்போதும் பார்வைக்கு எள்ளளவும் அசைவில்லாததாகவே காணப்படுகிறது. இப்பூமியின் தன்மையை உண்மையாய் அறியாதவனொருவன், நடுக்கடலில் காற்றிலும் மழையிலும் அகப்பட்டுக்கொண்டால்

௨

எப்போ தரையைக் காண்போமென்றும், எப்போ கரையின்மேல் காலை வைப்போமென்றும் ஆவற்படுகிறான். ஆனாலும் ஓரிடத்தில் ஒரு தடவையில் ஒரு பூகம்பத்தினால் உண்டாகிற அழிவுக்குக் கடலில் அநேகந்தடவை உண்டாகும் அழிவு ஈடாகமாட்டாது. இதற்குத் திருஷ்டாந்தமாக சென்ற அறுபது வருஷத்துக்குள் உண்டான பூகம்பங்களில் லட்சத்திற்கு அதிகமான ஜனங்களுமன்றி, அநேகவிடங்களில் கிராமம் கிராமமாய்த் தண்ணீரில் முழுகுவதுபோலப் பூமிக்குள் முழுகிப்போயிருக்கின்றன.

மேலும் இந்தப் பூகம்பமானது ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்தில் இல்லையென்றுசொல்லக்கூடாது. எந்தத் தேசத்திலும் ஒவ்வொரு சமயத்தில் பூகம்பம் உண்டாயேயிருக்கிறது. இந்தியா தேசத்தைச்சார்ந்த கூர்ஜர நாட்டுக்கு அருகிலிருக்கிற கச்சு என்னும் பிரதேசத்தில் பூஜ் என்னும் நகரத்தில் 1819-௵ல் ஒரு பூகம்பம் உண்டாய், அந்த நாடு முழுவதும் பூமி அநேக அடியாழம் உள்ளுக் கிழுத்துக்கொண்டு போனதுமல்லாமல், இரண்டாயிரம் பிரஜைகள் வரையில் உயிரோடு புதையுண்டு இறந்தார்கள். அதில் மனிதர் கால்பாவமாட்டாமல் தடுமாறும்படி பூமி அலைபோல் மடிந்து மடிந்து பெருங்கோஷத்தோடு அதிர்ந்துகொண்டிருந்தது. அப்போது காற்றும் மழையும் கூடி அடித்ததாம். பூஜ் பட்டணத்துக்கு அருகில் கோட்டை கொத்தளங்கள் சரசரவென்று சரிந்து விழுந்தன. ஆமத்பாத் என்னும் பட்டணத்தில் ஆமத் ஸுல்த்தானால் கட்டப்பட்டு 450 வருஷகாலம் ஸ்திரமாய் மேன்மை பெற்றிருந்த ஒரு பெரிய கோரி ஒரு க்ஷணத்தில் அடியோடே பெயர்ந்து விழுந்து விட்டது. பக்கத்திலிருந்த மலைகளினின்று கல்லும் மண்ணும் பெருங் காற்றடித்தாற்போல் நாற்புறமும் சிதறி விழுந்தன.

1833-௵ ஆகஸ்டுமாதத்தில் அத்தேசத்தில் வேறு பல விடங்களில் பூகம்பமுண்டாகிப் பெருந்தீமைகள் விளைந்தன. கல்கத்தா நகரத்தில் மூன்றுதரமும், லட்சணபுரியில் நான்குதரமும் பூமி அதிர்ந்ததாம். நேபாள தேசத்தின் பிரதான பட்டணமாகிய காட்மாண்டூர் என்னும் பட்டணத்தில் பூமியிலிருந்து பயங்கரமான ஒரு வெடியோசை கிளம்பிப் பூமி அதிர்ந்தபடியால், மேற்சொன்ன பூகம்பங்களுக்கு அதுவே மத்திய ஸ்தானமென்று ஊகிக்கப்பட்டது. அப்பொழுது அந்த ஊரிலும் மற்ற விடங்களிலும் அநேக வீடுகள் தலைகீழாய் இடிந்துவிழுந்து பாழாயின. சுப்பிரா என்கிற ஊரில் வெகு விசாலமும் ஆழமுமான பள்ளம் ஒன்று உண்டாகும்படி பூமி ஆவென்று வாய்திறந்தது. இப்படி ஒரு நாளெல்லாம் சிலவிடத்தில் அதிக வேகமாயும், சில விடத்தில் கொஞ்ச மிதமாயும் பூமி அதிர்ந்துகொண்டேயிருந்தது. மறு வருஷம் அக்டோபர் மாதத்தில் பத்தாவியா என்கிற பட்டணத்தைச் சுற்றியிருந்த பிரதேசங்களில் காக்கைவலிபோ

ல் வலிமையாயுண்டான அதிர்ச்சியி னால் ஒரு மலையின் பாதி நிலத்தில் அமிழ்ந்துபோக அம்மலையடிவாரத்தி லிருந்த கிராமம் இருந்தவிடந்தெரியா மல் போய்விட்டது.

சென்ற 1867-வருஷத்தில் சென்ன பட்டணத்திற்குத் தெற்கில் பதின்கா த தூரத்திலிருக்கிற விழுப்புறம் என் கிற ஊரில் ஒரு பூகம்பம் உண்டாயி ற்று; அதனால் ஜனங்களுக்காவது சொத்துக்களுக்காவது நஷ்டமாத்தி ரம் நேரிடவில்லை.

இப்படி நாளதுவரையில் பலதேச ங்களில் பலவிடங்களில் நேரிட்ட பூகம்பங்கள் கிட்டத்தட்ட ஏழாயிரம் என்று உத்தேசமுண்டு: இவற்றுள் இரண்டாயிரம் வருஷங்களுக்குப் பி ன் நேரிட்டவைதாம் அதிகம். அத ற்குமுன் நேர்ந்தவை ஐம்பத்தாறெ ன்று கணக்கிட்டிருக்கிறார்கள். இவ ற்றுள் பூமத்திய சமுத்திரக்கரையிலு ள்ள ரோட்சு என்னும் தீவில் இங்கி லீஸ் 224-வருஷத்தில் உண்டான பூகம்பத் தினால், அங்கு விசித்திரமாய்ப் பண் ணி நிறுத்தியிருந்த கலாஸஸ் என் னும் பூதம்போன்ற ஒரு பிரதிமை கடலில் விழுந்துவிட்டது விசேஷ ஆச்சரியம். இந்தப் பிரதிமை வெ ண்கலத்தினால் நூற்றைந்தடி உயரமு ம் அதற்குத்தக்க பருமனுமாய் ஒரு கை தூக்கி நெருப்புச் சட்டி ஏந்தி, மற்றொரு கையில் வில் பிடித்துக் கொண்டிருக்கின்ற ஒரு பூத ரூபமாய் செய்யப்பட்டது. அது அசையாமல் பத்திரமாய் நிற்பதற்காக போலாயிரு ந்த கால்களுள் பெரும் பாறைகள் நி றைந்திருந்தது. அதின் தேகத்தி னுள்ளே மெத்தைப் படிக்கட்டைப் போல் சுழல் படிக்கட்டு ஒன்று கட் டி, அதின் வழியாய்த் தலையின்மே லேறி வெகு தூரம் பார்க்கும்படி நிரு மித்திருந்தது. அதனால் அநேக ஜன ங்கள் அதன்மேல் ஏறி நாற்புறமும் விநோதமாய்ப் பார்த்து இறங்கி வரு வது வழக்கம். அது நிறுத்தியிருந்த இடம் கப்பல்களுக்குப் அடைக்கல ஸ்தானமான ஒரு சிறு குடாவின் து வாரமாயிருந்தபடியால், அதின் கால் கள் ஜலத்திற்கு இந்தண்டையும் அந் தண்டையும் பெரிய கல்மேடைகளி ன்மேல் உறுதியாக ஸ்தாபித்து, அந் தக் கால் நடுவில் பெரிய மரக்கலங் கள் பாய்விரித்துச் செல்லும்படி ஏற் படுத்தியிருந்தது. இந்த விசித்திர மான பிரதிமை அதிக பாரமும் உறு தியான கட்டும் உள்ளதாயிருந்தும், ஒரு நொடியில் அடியற்ற மரம்போல் விழுந்து தண்ணீரில் முழுகிப்போ னால் அந்தப் பூகம்பத்தின் வலிமை எவ்வளவென்று சொல்லலாம்.

இன்னும் வரும்.

## சோம்பலை நீக்கி சுறு சுறுப்புள்ளவனாயிரு.

மித்திரா! நீ உன் சீவனை விரும் புகிறாயா! விரும்புவையானால், உன் காலத்தை வீணாக போக்காதே. தூங் குகிற நரிக்கு இரை கிடையாதென்ற

பழமொழியை மறந்தவர்கள் போல் யாதொரு காரணமுமின்றி நாம் எவ்வளவு காலத்தை நித்திரையில் வீணே கழிக்கிறோம். காலமானது எல்லாவற்றிலும் மஹா அருமையாய் இருக்க, அக்காலத்தை நாம் வீண்பொழுதாக கழிப்பதைவிடக் கேடு வேறென்ன இருக்கிறது? சென்றுபோன காலத்தை மறுபடியும் வரவேண்டுமென்று பிரார்த்தித்தாலும் ஒருபொழுதும் வீராது. நாம் இது போதுமான நேரமென்று சொல்வதெல்லாம் அநுபோகத்தில் பார்க்குந்தோறும் போதாமையாகவே இருக்கிறது.

அசாக்கிரதையே எவ்வகைத் துன்பத்திற்கும் மூலமாக இருக்கின்றது. சாக்கிரதையோ எல்லா நன்மைக்கும் இடமாக இருக்கின்றது. காலையில் நேரப்படத் தூங்குகிறவன் அந்நாள் முழுவதும் ஓடியோடிச் செய்யினும் அவன் தொடங்கிய காரியம் சூரிய அஸ்தமனமானாலும் முடியவே மாட்டாது. சோம்பலுள்ளவன் தன் எல்லா காரியங்களிலும் அதிமெதுவாக நடப்பதால், வறுமை அவனைத் தொடர்ந்து பற்றாமல் விடாது. நெடுநேரம் நித்திரையங்கம் இல்லாமல், தக்க காலத்தில் சயனித்து விடியற்காலத்தில் எழுந்திருப்பவன் எப்பொழுதும் சுகதேகியும் விவேகியும் செல்வ வந்தனுமாய் இருப்பான். தற்காலத்தில் நமக்கு இருக்கும் ஸ்திதியைவிட இன்னம் மேலாகிய க்ஷேமகாலம் எப்போது வருமென்று வீணே எதிர்பார்த்துக்கொண்டிருப்பதால் பயன் என்ன? நாம் எல்லாக் கேடிற்கும் மூலமாகிய சோம்பல் குணத்தைவிட்டு உழைப்போமானால், அதுவே நல்ல காலம். பாடுபடாவிட்டால் இவ்வுலகத்தில் பலன் ஒன்றும் இல்லை. உழைப்பாளிக்குச் செல்வந்தானே வந்துதவும். நாளை நமக்குநேரிடும் இடையூறுகள் இன்ன என்று நமக்குத் தெரியாமையால், நாம் எத்தனித்த காரியங்களைப் பின்பு பார்த்துக்கொள்வோமென்று சோர்வடையாமல் அன்றே செய்து முடிப்பது அறிவுடையோர் கடனும். நீ ஒருவன் கைக்கீழ் ஏவலாளியாக இருப்பாயானால், அவன் உன் அசாக்கிரதையைக் கண்டு, உன்னைச் சோம்பேறி என்று அழைத்தால், அப்பொழுது உன் சரீரம் எல்லாம் குன்றி நீ நாணப்படமாட்டாயோ? இப்படியிருக்க, எசமான் தத்துவத்தை அடைந்திருக்கிற நீ, உன்னைப் பற்றியும் உன் குடும்ப சவரக்ஷணையைப்பற்றியும் உன் தேச க்ஷேமத்தைப்பற்றியும்செய்யவேண்டியகாரியங்கள் அநேகமாய் இருக்க, அவைகளை விட்டுச் சோம்பலடைந்து கொஞ்சமாகிலும் அக்காரியங்களில் சிரத்தை இல்லாதவனாய் இருப்பது மஹா வெட்கம் அல்லவோ?

நீ செய்யவேண்டிய காரியங்கள் அநேகமாய் இருக்கலாம். அவையாவையும் செய்து முடிக்க உனக்கு வல்லமை இல்லாதிருந்தாலும், தொடங்கிய காரியத்தை மனத் தளர்ச்சியின்றி விடாது கடைப்பிடிப்பாயானால், அசாத்தியமான காரியங்களும் எளிதாக முடிந்துபோகும். அவை ஒருமிக்க

முடியாவிட்டாலும் "அடிமேல் அடி அடிக்க அம்மியும் நகரும்," "பல துள்ளி பெரு வெள்ளம்," "எறும்பூரக் கல்லுந் தேயும்" என்ற பழமொழிப்படியே சிறுகச் சிறுகவாயினும் முடியும் என்பதற்கு சந்தேகமில்லை. ஆதலால், நீ சோம்பலை நீக்கி சுறுசுறுப்புள்ளவனாய் இருக்க வேண்டும்.

## ஒட்டு மரங்கள்.

இதின் அடியில் சொல்லப்போகிற விதத்தை அநுசரித்து அதின்படி செய்தால், சுவைக்குதவாத கனிகளைத் தரும் விருட்சங்களும் யாவரும் வியக்கத்தக்க முதல் தரமான கனிவர்க்கங்களைக் கொடுக்கும்.

அது எவ்வாறெனில் நல்ல சாதி மரத்தின் ஒரு சிறு கிளையைத் தறித்து அதில் ஒழுகுகிற பால் சற்றேறக்குறைய வடியுமட்டும் தரையில் வெயில்படாமல் வைத்து வைத்துப் பின்பு அக்கிளையின் ஒரு முனையைச் சீவி எந்த மாமரத்தின் கிளையிலாவது அது நுழையத்தக்க துவாரம் இட்டு, இவ்விரண்டு கிளைகளையும் சரியாய் ஒருடல்போல் பொருத்திவைத்து, முன் தறிக்கப்பட்ட சிறு கிளையின் ஒரு பக்கத்து மேல்பட்டையை அம்மரக்கிளையின் பட்டையோடு ஒன்றச் செய்து, பின்பு பொருத்திய இடத்தை வாழை நாரினால் லேசாக கட்டி. அதின் மேல் கொஞ்சம் களிமண், பசுவின் சாணம், வைக்கோலின் கூளம் இவைகளைப் பிசைந்து நன்றாக பூசவேண்டும். இவ்வாறு சாக்கிரதையாயும் கிரமமாயும் செய்தால், விரைவில் பலனைத் தராமற்போகாது அன்றியும், இக்கனியானது அப்பெரு மரத்தின் கனிபோல் இராது. ஒட்டப்பட்ட அச்சிறு கிளையின் கனி போலவே மாறி மஹா மாதுரியமாய் இருக்கும். இவ்விதமாய் மாமரத்திற்கே யன்றி இன்னும் பற்பல மரங்களுக்கும் செய்யலாம். இவ்வாறு ஒட்டப்பட்ட மாமரத்திற்கு ஒட்டு மாமரமென்று பெயர்.

## வீட்டுக் கல்வி.

இஸ்லாம் மித்திரர்களாகிய பெற்றோர்களுக்குப் புத்தி போதனையாக வீட்டுக் கல்வியைக் குறித்து சொல்லுகிறதாவது:—

சில பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களில் லெப்பை மார்களிடங் கல்வி கற்கும்படி அனுப்பி வருவதோடே தமக்குள்ள பாரக் கடமைகளெல்லாம் நிறைவேற்றியாயிற்றென்று நினைக்கிறார்கள். அப்படி நினைப்பது தவறான காரியமாம். முந்த முந்தத் தம்வீட்டிலே தானே தொட்டிற்பிள்ளையாயிருக்கிற காலந் தொட்டுப் பெற்றோரே அதிக விமரிசையுடன் நல்ல வளர்ப்பு வளர்த்துக்கொண்டு வரவேண்டியது. அந்த முதல் அஸ்திபாரமான வளர்ப்பு பள்ளிக்கூடத்தாலே வருமென்று காத்திருப்பது வீணையாம். சவலையா

யிருக்கும் போதே இருதயத்தைப்பண்படுத்திவரவேண்டியது. அவவப்பிள்ளைகளுடையவீடே பிறந்த பள்ளிக்கூடம். பிதா மாதாக்களே அப்பள்ளிக் கூடத்தின் உபாத்தியாயர்கள். அங்கே மூந்த மூந்த இஸ்லாம் மார்க்கக் கல்வி தொடங்க வேண்டியது. சில பிள்ளைகள் பள்ளிக்கூடங்களிலே கல்வி கற்று வருகிற காலங்களிலே நல்லவர்களாய், தேவபக்தியுள்ளவர்களாயிருந்து, பள்ளிக்கூடக் கல்வி விட்ட பிறகு பல முறையுங் கெட்டு மார்க்க விதி விலக்குகளை யசட்டை செய்து விடுகிறவர்களா யிருக்கிறார்கள். அதற்கு நியாயம் வீட்டுக் கல்வியில்லாமையேயாம். வீடானது பள்ளிக்கூடம் போலவும், பிதா மாதாக்கள் உபாத்தியாயர்கள் போலவும் இல்லாமையாலேதான் பள்ளிக் கூடங்களிலே பெற்ற நல் வளர்ப்பையும் பின்னிழந்து விடவேண்டியதாய் வந்து விடுகின்றது.

ஓ! பெற்றோரே! இச் சீவியத்திலும் நித்திய சீவியத்திலும் உங்கள் பிள்ளைகள் மனப்பாக்கிய முடையவர்களாயிருக்கவேண்டுமென்று நீங்கள் விரும்பினால், உங்கள் விருத்தாப்பியமான காலத்தில் சர்வ வல்லமையுடைய அல்லாஹுதஆலாவின் ஆசீர்வாதம் வேண்டுமென்று விரும்பினால், நீங்கள் மரணப் படுக்கையிலே கிடந்து இந்த உலகை விட்டுப் பிரியவிருக்கும்போது, உங்களுடைய பிள்ளைகள் உங்கள் படுக்கையைச் சூழ நின்று ஆசீர்வதுஞ் சொல்ல வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் உங்களுடை பிள்ளைகள் குழந்தைகளா யிருக்கும் போதே அவர்களை அதற்கான பக்குவத்திலே வளர்த்து வரும்படி தெண்டிக்கக் கடவீர்கள்.

வீட்டிலே தாயானவள் வளர்க்கின்ற பத்தியான வளர்ப்பிலும், தகப்பனானவர் காட்டுகின்ற நன் மாதிரியிலும் பார்க்க பள்ளிக்கூடத்திலே அதிகமான நன்மை வரமாட்டாது.

வீட்டிலே, பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தைகளும், ஒவ்வொரு கிரியைகளும், பிள்ளையின் மனதிலே ஆழப் பதிகின்றன. அதற்கு மேலே ஒரு உபாத்தி அல்லது லெப்பை எவ்வளவு புண்ணிய சாங்கோபத்தைப் பயிற்றினாலும் அத்திபாரங் கேடானபோது உபாத்தியின் உபதேசமெல்லாம் கணத்திலே அழிந்துபோக வேதுவாகின்றன.

பெற்றோரே! உபாத்திமார் என்ன செய்ய இயலும்? நீங்களிட்ட அஸ்திபாரத்திலிருந்து எழும்புவதல்லாது வேறென்ன? ஆகையால் பிரதானமான மூல வேலை உங்களிலேயே தங்கியிருக்கிறது பிள்ளைகளைத் தேவபத்தியிலே நிலைப்படுத்தி வளர்க்கிறதற்கு அசட்டை செய்து விடுகிறதிலும் பார்க்க, அவர்களை நாசப்படுத்தி விடுவது உத்தமம். ஆகையால், பெற்றோரே! நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு எங்கள் ஈமான் இஸ்லாம் இன்னதென்பதைக்காட்டி, தொழுகை வணக்க முதலியவற்றைப் பயிற்றி, எங்கள் இரட்சக நாயகரின் திருவாக்கியங்களை மனப்பாடமா யிருக்கும்படி

கூட்டி, என்றும் அவர்களின் மீது விழிப்பாயிருந்து சன்மார்க்கத்திலே வளர்த்து, உங்களுக்கும் அவர்களுக்கும் நித்திய பாக்கியத்தைத் தேடிக்கொள்ளும்படி தெண்டித்துவரக்கடவீர்கள்.

## நான்கு இமாம்கள் சரித்திர குசனம்.

[சென்ற 9 மிலக்கப் பத்திரிகைத் தொடர்ச்சி.]

நான்கு இமாம்களிலும் சிரேஷ்டராகிய நாயகம் இமாம் அபூஹனீபா றளியல்லாஹு அன்ஹு அவர்களின் வாழ்நாட்களின் முற்கூற்றில் ஒவ்வொரு இராக்காலத்தையும் இரண்டாய்ப் பிரித்துப் பாதியை வணக்கத்திலே களித்து வந்தார்கள். அப்படி இரா வணக்கஞ் செய்துவரும்போது இன்னுமொருவருடம் இந்த அபூஹனீபா இராமுழுதிலும் விழித்திருந்து வணங்குவார் என்று இமாம் அவர்களிற் சைகையாய் ஒரு வழிப் பிரயாணியாகிய மனிதன் கூறினர். இவ்வார்த்தையைக் காதிற் கேட்ட இமாம் அவர்கள் "ஆ! நான் செய்யாத ஒன்றை யென்னில் உள்ளதாக வர்ணித்ததைப்பற்றி நான் அல்லாஹுத்தஆலாவுக்கு வெட்கிக்கின்றேன்" என்று தன்னிலே சொல்லிக் கொண்டு, இதன் பிறகு இரவுமுழுதிலும் வணங்கிவந்தார்கள் என்று தத்துவ சாஸ்திரத்தில் அரபிகளில் அதி பிரபல்யமான நாயகம் இமாம் கஸ்ஸாலி றஹ்மதுல்லாஹி அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

இமாம் அபூஹனீபா றஹ்மதுல்லாஹ் அவர்கள் துவக்கத்தில் ஒவ்வொரு இரவிலும் முன்னூறு "றக்காஅத்" வீதம் தொழுதுகொண்டு வந்தார்கள். அப்படி வணங்கிவரும்போது வழியிற்போன ஒரு மனுஷி இமாம் அவர்களை இன்னொரு பெண்ணிடஞ் சுட்டிக்காட்டி, அம்மா! அதோயிருக்கிற புண்ணிய புருஷோத்தமர் ஒவ்வொரு இரவுகளிலும் ஐஞ்ஞூறு "றககாஅத" தொழுவார் என்றாள். இவ்வசனத்தைக் காதிற்கேட்ட இமாம் அவர்கள் "எம்மில் இல்லாத ஒன்றை இப்பெண்கள் இட்டுக் கட்டிச் சொல்லிவிட்டார்களே, இதனால் நாயனுக்கு வெட்கப்படுகிறேனே!" என்று அதுமுதல் ஐஞ்ஞூறு "றக்காஅத்" தொழுது வந்தார்கள்.

இப்படி வழக்கமாக வணங்கிவருங் காலத்தில், சிறு பிள்ளைகள் சிலர் இவர்கள் ஒரு இரவில் ஆயிரம் "றக்காஅத்" தொழுகிறவர்கள் என்று ஒருவருக்கொருவர் இமாம் அவர்களைப்பற்றிப் பேசிக்கொண்டுபோவதைக் கேட்டிருந்த இமாம் அன்றுமுதல் ஆயிரம் "றக்காஅத்" தொழுவதை வழக்கப்படுத்திக்கொண்டார்கள். சத்த சத்திய பரிசுத்த குர்ஆன் வேத வசனத்தில் "அவர்கள் செய்யாத நன்மையைக்கொண்டு புகழப்பட உவப்பார்கள்" என்று கெட்ட மனிதர்களைப்பற்றிய வர்ணிப்பில் கூறப்பட்டிருப்பதால், தாங்கள் செய்யாத வணக்கத்தைப்பற்றிச் சனங்கள் பேசியதால், தாம் அவபாக்கியத்திற் கிலக்காகாது (நாயனுக்கஞ்சி) அப்படி வணக்கஞ் செய்தார்கள்.

இமாம் அவர்கள் முந்நாம வணக்கமாகிய "இசா" தொழுகைக்காகச் செய்துகொண்ட "வுழூ" என்னும் கரபாத சுத்திகர ஸ்நானத்தால் [illegible] வருஷக்காலம் சுப்ஹு என்னும் [illegible]

றார்கள். "ஸாஜிதா" என்னும் சிரந்தரையில் வைத்துச்செய்யும் வணக்கத்தினால், அவர்களுடைய முழந்தாட்கள் ஒட்டகையினுடைய முழந்தாட்களைப்போல காய்ச்சிருந்தனவென்றால் அவர்கள் வணக்கஞ் செய்த தன்மையை வாசிப்பவர்கள் நிதானித்துக்கொள்வார்கள்.

தாவூதுத்தாயி றஹ்மதுல்லாஹி என்பவர்கள் இமாம் அவர்கள் சகிதராக மிக்க அந்நியோந்நியமாய் 20 வருஷக்காலம் இருந்து பார்த்திருக்கின்றார்கள், அந்த 20 வருஷக்காலத்திற்கிடையில் ஓர் சபையிலாவது தனித்த இடத்திலாவது இமாம் அவர்கள் ஒரு தினமாவது கால் நீட்டியிருக்கவாவது அல்லது, தலை திறந்து இருக்கவாவது நான் காணவில்லை என்று கூறியிருக்கின்றார்கள்.

நாயகமே! தாங்கள் தனித்திருக்கும்போது தங்கள் காலை நீட்டிக் கொஞ்சம் சௌக்கியம் பெறுங்கள் என்று இமாம் அவர்களை விளித்துக் கேட்கப்பட்டதற்கு "தனித்தவிடத்தில் தனியவனுடன் தாட்சணியமாயிருக்கிறது மிகவும் உத்தமம்" என்று விடை சொல்லப்பட்டது. இன்னும் ஒருபோது அவர்கள் ஒரு குழியைக்கண்டு அதற்குள்ளே தங்கள் காலை நீட்டிக்கொண்டார்கள், அதைப்பற்றிக் கேட்டபோது, எந்தப்பக்கத்திலாவது பரிசுத்தமாகிய வேதம "குர்ஆன்" முஸ்ஹபுகளிருக்குமல்லவா? ஆகையினால்தான் நான் இவவாறு செய்கிறேன என்று சொன்னார்கள்.

இமாம் அவர்கள் இரவையில் அல்லாஹுத்தஆலாவைப் பயந்து அழுவார்கள், அவர்களின் அந்தச் சத்தத்தைக்கேட்ட அயல்பாகக் காரரெல்லாம் மனங்கரைந் திரங்கிப் பரிதபிப்பார்கள்.

முஷ்திறிப்னுகிறும் என்பவர்கள் இமாம் அவர்களைப்பற்றிச் சொல்லுகிறதாவது; இமாம் அவர்கள் வணக்கத்திலும், இப்பிரபஞ்ச வாசையொழித்தலிலும் மெத்தக கடமையாயிருந்தார்கள். அவர்களின் சந்நிதானத்திற்கு நான் கால நேரம் போய் அவர்கள் செய்யுங் காரியங்களைப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நாடி அங்கு தரிபட்டிருந்தேன். அவர்கள் உதயகால வணக்கத்தைச் செய்து முடித்துக்கொண்டு "அவுறாது" களென்னும் ஓதல்களை யோதி முடித்தார்கள் அதன் பிறகு மாணவர்களுக்கு வித்தாப்பு ஓதிக் கொடுத்தார்கள், அது மத்தியான வணக்க வரையிலும் நடத்தப்பட்டது. பின்னே, மத்தியான வணக்கத்தின்மேல், பிற் பகல் வணக்கம் வரையிலும் திரும்பவும் கல்வி விஷயத்திலே தங்கள் முயற்சியைச் செலுத்தினார்கள். பிற பகல் வணக்கத்தினமேல மாலை நேர வணக்கம் வரைக்கும் திரும்பவும் கல்வியிலே தங்கள் காலத்தைக்கழித்து, மாலை நேர வணக்கத்தின பிறகு முற் சாம வணக்கம் வரைக்கும் வநதனம் ஓதல், தியானம் முதலியவற்றிலிருந்து முற் சாம வணக்கத்தை முடித்தார்கள். அப்போது இவர்கள் இனி வணக்கத்தால் மீண்டிருப்பார்கள் என்று நினைத்து நான் பார்த்திருந்தேன், "அல்லாஹ்வுக்கு ஸ்தோத்திரமாக!" இமாம் அவர்கள் சனங்கள் கலைந்தொடுங்கியவுடன் பள்ளிக்குட் பிரவேசித்தவர்கள் கிழக்கு வெளிக்கும் வரையில் ஒரே வணக்கமாக தொழுகையிலே இருந்துவிட்டார்கள், இப்படி மறு நாளும் வந்துபார்த்தேன், அப்படியே தான் கல்வியிலும் வணக்கத்திலும் வாழ்நாளைக் கழிக்கக்கண்டேன். இவர்களை நான் பிரியப்படாதென்று உடனே அபிப்பிராயங் கொண்டேன் என்று கூறுகிறார்கள்.

இன்னும் வரும்.